


முத்தையனுக்கு வழி பிறந்தது

சென்னை கல்வித்துறை வெளியீடு

முத்தையனுக்கு வழி பிறந்தது

(முதியோர் கல்வி மடல்—21)

M. அரங்கநாதன்

சென்னை கல்வித்துறை வெளியீடு.

முதற் பதிப்பு மார்ச்—1957.

ஏஷியன் பிரிண்டர்ஸ் சென்னை—5.

முன்னுரை

குடியாட்சிக்குக் கல்வி அடிப்படை. அக்கல்வி முதியோர்க்கும் தேவை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டால் போதாது. மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. அவை அதிகம் இல்லை. அவற்றை எழுதத் தனிப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி முதியோர் இலக்கியப் பண்ணையில் அளிக்கப்பட்டது. இப்பண்ணை 1955-ம் ஆண்டில் பீளமேட்டில் நடந்தது. இதை நடத்தியது சென்னை அரசாங்கம். உதவியது இந்திய அரசாங்கம்.

இப்பண்ணையில் உருவானது இவ்வெளியீடு. இதைப்போல் வேறு சிலவும் வெளிவருகின்றன. முதியோர் படித்துப்பயன் பெறவேண்டு மென்பது எல்லோருடைய விருப்பம்.

சென்னை,
6-9-1956.

நெ. து. சுந்தரவடிவேலு,
பொதுக் கல்வி இயக்குநர்.

இதில் உள்ளவை

			பக்கம்
1.	முகம் வாடிய முத்தையன்	....	1
2.	தங்கமான தங்கம்	....	2
3.	குழந்தைச் செல்வம்	...	3
4.	குடும்பத் தொல்லை	....	4
5.	வழி பிறந்தது	....	6
6.	பால் பண்ணை	...	9
7.	பணம் சேர்ந்தது	....	10
8.	மகள் திருமணம்	....	13
9.	குடிசைவீடு கல்வீடு ஆனது.	...	14

முத்தையனுக்கு வழி பிறந்தது

1. முகம் வாடிய முத்தையன்

முத்தையன் உண்மை உழைப்பாளி. படித்தவன். அவனுக்கு வயது நாற்பது; சர்க்கரை ஆலையில் வேலை. ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் கூலி. வேலை செய்தால் கூலி. அவன் வீண் செலவு செய்யமாட்டான்; நல்லவன். ஆனால், அவன் முகம் வாடி இருப்பான். சில சமயம் ஆலை முதலாளி, "முத்து, நீ நன்றாக வேலை செய்கிறாய். உன்னிடம் சோம்பலே

கிடையாது. நோய் என்று நீ ஒரு நாளும் சொன்னதில்லை. அப்படி இருந்தும் ஏன் உன் முகம் வாட்டமாகவே இருக்கிறது?'' என்று கேட்பார். முத்தையன் தலை குனிந்து "ஒன்றுமில்லை, ஐயா!'' என்பான். வேலைக்குப் போய்விடுவான். எல்லோரிடமும் பழகுவான். ஆனாலும் அவன் முகத்தில் களை இருக்காது.

2. தங்கமான தங்கம்

முத்தையன் மனதை யார் அறிவார்? அவன் மனைவி தங்கம் அறிவாள். தங்கம் தங்கமான பெண். அவள் காதிலும் கழுத்திலும் நகைகளில்லை; கணவன் கேட்ட சமயங்களில் ஒவ்வொன்ருகக்

கழற்றிக் கொடுத்து விட்டாள். 'நகை இல்லையே!' என்ற வருத்தம் அவளுக்கு இல்லை. அவள் முகத்தில் எப்போதும் புன்னகை காணப்படும். ஆனால், அவள் உடம்பு துரும்பாகி விட்டது.

3. குழந்தைச் செல்வம்

முத்தையனுக்குத் திருமணம் ஆகிப் பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. அவனுக்குச் சொந்தமானது ஒரு கூரை வீடு. கூரைதான் ஒழுகாமல் இருக்கிறதா? மழைநாளில் வீடு குளமாக இருக்கும். தங்கமோ ஆறு குழந்தைகளின் தாய். நாலு காசு சேர்க்கலாம் என்ற ஆசை அவளுக்கு உண்டு. " கூரை வீடு கல்



குடும்பம் பெரிதாகிவிட்டது.

வீடு ஆகாதா !" என்றும் ஏங்குவாள். காசு மிச்சம் ஆவது எப்படி? கடன் ஏறிக்கொண்டே போகிறதே !

4. குடும்பத் தொல்லை

சில வேளைகளில் தங்கத்திற்குக் கோபம் வரும். பிள்ளைகளுக்கும் அடி விழும். என்ன செய்வாள்?


பாவம்! கைக்குழந்தைக்குக் கக்குவான். இரவெல்லாம் கண் விழிப்பு. தொட்டில் ஆட்டிக்கொண்டே இருப்பாள். தூங்கி விழுவாள்.

மூத்த பெண்ணுக்கு வயது பதினுன்கு. எட்டாவது படிக்கிருள். நோய் கண்ட பிள்ளையைப் பார்ப்பவள் அவள்தான். தங்கமும் முத்தையனும் சில வேளைகளில் பட்டினி இருந்ததுண்டு. குழந்தைகள் எப்பொழுதும் பசியாக இருந்ததில்லை. குடும்பம் பெரிதாகிவிட்டது. குழந்தைகளே அவள் உயிர். முத்தையன் ஆலையில் வேலை செய்தாலும் அவன் மனம் வீட்டிலேயே இருக்கும்.

பிள்ளைகள் எல்லாம் படிக்க வேண்டும். வருமானமோ கொஞ்சம். பிள்ளைகளைப் பார்க்கிறபோது மகிழ்ச்சி. அவர்களை வளர்ப்பது என்றால் மலைப்பு. அவர்கள் வறுமை தீர வழி பிறக்குமா ?

5. *வழி பிறந்தது*

முத்தையனுடைய நண்பன் கமலப்பன். ஒரு நாள் காலை முத்தையன் வீட்டிற்குக் கமலப்பன் வந்தான். “முத்தையா, உன் குடும்பம் பெரிது. என் குடும்பமும் பெருகி விட்டது. நம் சம்பளத்தைக் கொண்டு நம் குழந்தைகளை நாம் காப்பாற்ற முடியாது. நம் வறுமை தீர வழி பிறந்தது!” என்றான்.



நம் வறுமை தீர வழிபிறந்தது.

முத்தையன் முகம் மலர்ந்தது. "என்ன வழி? கமலப்பா! சொல்லு" என்றான்.

"முத்தையா, கேள்: நானும் உன்னைப் போலவே கவலையுடன் இருந்தேன். கணக்கப்பிள்ளை கண்ணுசாமியை நேற்றுப் பார்த்தேன். கண்ணுசாமியும் நம்மைப்போல்

ஏழையாய் இருந்தவர். இப்போது நாலைந்து கறவை மாடுகள் வைத்திருக்கிறார்; புது வீடு கட்டிவிட்டார். அவர் எப்படி பணக்காரர் ஆனார்? அது தெரியாமலே இருந்தது. நேற்றைய தினம் தெரிந்தது முத்தையா. நம் ஊரில் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அது ஒரு பால்பண்ணை வைத்து நடத்துகிறது. மாடு இருப்பவர்கள் பால் பண்ணையில் பாலைக் கறந்து கொடுக்கவேண்டும். பால் பண்ணை பாலை வாங்கி விற்கிறது. பண்ணையில் பால் கறந்தால் நமக்கும் பணம் மொத்தமாக வந்துவிடும்.

கண்ணுசாமிக்கு இந்தப் பண்ணையால் பணம் சேருகிறது,'' என்றான்.

6. பால் பண்ணை

கமலப்பன் சொன்னதைக் கேட்ட முத்தையனுக்கு வழி பிறந்தது. 'பண்ணை எப்படி நடக்கிறது?' என்று அவனுக்குப் புரியவில்லை. ''கூட்டுறவுச் சங்கம் என்பது என்ன? சங்கம் பண்ணையை எப்படி நடத்துகிறது?'' என்று கமலப்பனைக் கேட்டான். ''பலர் கூடி நடத்துவது சங்கம். சங்கத்திற்குப் பணம் வேண்டும். வேண்டும் பணத்தை முதலாகக் கொண்டு சங்கம் நடக்கிறது. அந்தப் பணத்திலிருந்து கறவை மாடு

வாங்கக் கடன் கொடுக்கிறது சங்கம். பத்து ரூபாய் பணம் கட்டி சங்கத்தில் சேர்ந்தால் நூற்று ஐம்பது ரூபாய் கடன் கிடைக்கும். நானும் சங்கத்தில் நேற்று நூற்று ஐம்பது ரூபாய் கடன் வாங்கினேன். எனக்குக் கண்ணுசாமி கையெழுத்து போட்டார். நான் உனக்குக் கையெழுத்து போடலாம். நீயும் பணம் வாங்கலாம்,'' என்ருன் கமலப்பன்.

7. பணம் சேர்ந்தது

முத்தையனுக்கு அளவில்லாத ஆனந்தம். அவன் முதலாளியிடம் போய் பத்து ரூபாய் வாங்கிவந்து கூட்டுறவுச் சங்கத்தில் கட்டிஞன்.

சங்கத்தில் ஒருவனாக ஆனான். அதனால் நூற்று ஐம்பது ரூபாய் கடன் வாங்கினான்.

முத்தையன் வீட்டிற்குக் கறவை மாடு வந்தது.

தங்கமும், குழந்தைகளும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

தங்கத்தின் எருமை மாடு நிறைய பால் கொடுத்தது. காலையில் இரண்டு படியும், மாலையில் ஒன்றரைப் படியும் கறக்கும். முத்தையன் தினமும் மாட்டைக் குளிப்பாட்டுவான். ஊர் மாடுகளோடு தங்கத்தின் மாடும் பசும் புல் மேய்ந்து வரும். தவிடு, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டைக்குக் குறைவு இல்லை.

தங்கம் தினம் காலையிலும், மாலையிலும் பால் பண்ணைக்குப் போவாள். பால் கறந்து கொடுப்பாள். ஒரு படி பால் விலை முக்கால் ரூபாய். தங்கத்தின் மாடு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் பத்து அணு பால் கறந்தது. முதல் மாதத்தில் எழுபத்து எட்டு ரூபாய், பன்னிரண்டு அணு சேர்ந்தது. கடனுக்காகச் சங்கம் பதினைந்து ரூபாய் எடுத்துக் கொண்டது. தீனிச் செலவு போக ஒரு மாதத்திற்கு முப்பது ரூபாய் மிச்சப்பட்டது. பத்து மாதங்களில் நூற்று ஐம்பது ரூபாய் கடனும் தீர்ந்து விட்டது.

ஒவ்வொரு மாதமும் முப்பது ரூபாய் மிச்சப்பட்டால் தங்கத்திற்கு

எவ்வளவு ஆனந்தம் இருக்கும்? முதல் ஆண்டில் முந்நூறு ரூபாய் சேர்த்தான் முத்தையன்; சிக்கனமாகவே குடித்தனம் செய்தான்.

8. மகள் திருமணம்


முதலில் வாங்கிய கடன் தீர்ந்ததும், முத்தையன் மறுபடியும் கடன் வாங்கினான்; வாங்கிய பணத்தோடு கையில் இருந்த பணத்தையும் சேர்த்து இரண்டு கறவை மாடுகள் வாங்கினான். முதலில் வாங்கின மாடு பால் மறுத்து விட்டது. புதிய இரண்டு மாடுகள் கறந்தன. மாடு வளர்ப்பதில் தங்கம் மிகவும் கெட்டிக்காரி. தொழுவம்

எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கும். தங்கம் மாடுகளுக்கு நல்ல தீனி வைப்பாள். மாடுகளுக்கு நோயே வருவதில்லை. மூன்று ஆண்டுகளில் முத்தையன் பணக்காரன் ஆனான். மூத்த பெண் மணப் பருவம் அடைந்து விட்டாள். படித்த பெண்ணுக்கு மாப்பிள்ளையா பஞ்சம்? பணத்தின் அருமை முத்தையனுக்குத் தெரியும். சிக்கனமாக மகளுக்கு மணம் செய்தான்.

9. குடிசை வீடு கல்வீடு ஆனது

ஆறு ஆண்டுகள் கழிந்தன. முத்தையன் மாட்டுத் தொழுவத்தில் ஆறு கறவை மாடுகள் இருந்தன.

கூட்டுறவுச் சங்கத்தில் முத்தையனுக்கு நல்ல பேர். சங்கத்திலும் அவன் சுறுசுறுப்பாக இருப்பான். எல்லோரும் அவனைப் பாராட்டினர். அவன் நண்பன் கமலப்பனும் சங்கத்தில் ஒழுங்கானவன். தங்கத்தின் ஆசையும் நிறைவேற வேண்டாமா?



இப்போது அவன் ஒரு அழகான கல்வீட்டில் வாழ்கிறான்.

ஓடு, கல், மரம் ஆகிய சாமான்களைக் கொஞ்சம் கொஞ்சமாக முத்தையன் சேர்த்தான்; வீடு கட்டினான். இப்போது அவன் ஒரு அழகான கல் வீட்டில் வாழ்கிறான். தங்கத்தின் தன்மை, முத்தையன் முயற்சி, பால் பண்ணையின் பயன்தந்த செல்வம்!

பார்த்தீர்களா, கூட்டுறவுச் சங்கத்தின் நன்மையை!

சென்னை கல்வித்துறை

முதியோர் கல்வி வெளியீடுகள்

மடல்கள் :

விலை ஒரு அணா

1. ஆணியும் நிமிஷமும்
2. கேள்வி பதில்
3. இவை ஆகாது
4. நாட்டின் பெருமை
5. கண்டு கற்போம்

சுவடிகள் :

விலை இரண்டு அணா

1. பார்வதிக்கு ஒரே பிள்ளை
2. பெண்ணா? போரா?
3. நல்ல தீர்ப்பு
4. வரப்புத் தகராறு
5. ஊதாரி ராமனும் உழைப்பாளி கந்தனும்
6. சுவேதன்
7. சேவல் சண்டை
8. மந்திரம் இல்லை! மாயம் இல்லை!
9. ஐயோ! தீ!
10. செவலை நொண்டுகிறது
11. வள்ளுவர் பேசுகிறார்
12. ஒரு இனிப்பான செய்தி
13. புத்தர் வரலாறு
14. வண்ணானும் வண்ணாத்தியும்
15. வண்டி வளர்ந்த கதை
16. எப்படிப் பிறந்தது?
17. எப்படிச் செய்தனர்?
18. மணி என்ன?
19. வசதி வேண்டுமா?
20. பணம் சேர்த்தீரா?
21. முத்தையனுக்கு வழி பிறந்தது
22. வாழும் வழி
23. ராணி மாளிகை
24. பாம்பு கடித்தால்...
25. ஓடி ஒளிந்த ராமன்
26. நகையே வேண்டாம் மச்சான்!
27. மனம் மாறுமா?
28. குப்பையே மாணிக்கம்!
29. நமது தேசியக்கொடி
30. வானம்

நூல்கள் :

விலை இரண்டு அணா

1. மின்னலும் இடியும்
2. நீரில் மூழ்கினால்...
3. முத்து ரத்தினம்
4. குடை சாய்ந்தது
5. ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்
6. பணம் வாங்காத வைத்தியர்

கிடைக்கும் இடம் :

சென்னை அரசினர் அச்சகக் கிளை

(புத்தக விற்பனை நிலையம்)

166, மவுண்ட் ரோடு சென்னை-2.

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை-5. (1—3—'57)